## சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

**தாய்மொழி - தரம் 03 / இரண்டாந் தவணை - முதலாம் வாரம் ( $L_4$ $S_4$ $R_4$ $W_4$ )**

**தயாரிப்பு – இரத்தினபுரி கல்வி வலயம், ஆரம்பபிரிவு / ஆசிரிய ஆலோசகர் வீ.ராஜகுமாரி**

- சகலரும் பொதுவாக அறிந்திருக்க வேண்டியவற்றை அறியத் தருவன **அறிவித்தல்** ஆகும்.
  **உ+ ம்** நூலகத்தில் அமைதியைப் பேணவும்.
- ஒருவர் பின்பற்றி நடப்பதற்கு உதவும் வகையில் அறிவுரை கூறுதல் **அறிவுறுத்தல்** ஆகும். **உ+ம்** நூலகத்திற்குள் கைத் தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடாது.

- தரப்பட்டுள்ள விடயங்கள **அறிவித்தலா, அறிவுறுத்தலா** என்பதை நன்கு வாசித்து பின் குறிப்பிடுக.

1). கொரோனா வைரசு தொற்று பரவுவதால் பாடசாலைகள் மூடப்படும். ............................

2). கொரோனா வைரசு தொற்றுப் பரவுவதை தடுக்க கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். ...........................

3). நூலகத்திற்கு வரும் போது அங்கத்துவ அட்டையைக் கொண்டு வரவும். ..........................

4). இரவல் பெற்ற புத்தகங்களை உரிய திகதியில் ஒப்படைக்காவிடின் தண்டப் பணம் அறவிடப்படும். ................................

5). நூலகம் காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை திறந்திருக்கும். ...........................

6). நூலகத்தில் இரவல் பெறும் புத்தகங்களைச் சேதப்படுத்தினால் தண்டப்பணம் அறவிடப்படும். ...................................

7). ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3 மணிக்கு சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு நடைபெறும். ..................................

8). சிறுவர் நூலக வாசிப்புப் பகுதிக்குள் சிறுவர்கள் தவிர்ந்த வேறு எவரும் உள் நுழையலாகாது. ...................................

9). பௌர்ணமி தினங்களில் நூலகம் மூடப்படும். ...........................

10).நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசித்து முடித்ததும் உரிய இடங்களில் வைத்துவிட்டுச் செல்லவும். .....................................

11). புத்தங்களை அனுமதியின்றி வெளியே எடுத்துச் செல்லாதீர்கள். ...................................